*Tamilmanam International Research Journal of Tamil Studies*
*An international, peer-reviewed monthly academic research journal*
ISSN: 3049-0723 (Online)
3107-7781 (Print)

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Monthly Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor3.5 Multidisciplinary International

Issue DOI: https://doi.org/10.63300/tm12032026

**Vol. 12 No. 03 (2026): August 2026**, **p510-520** | Available online at: www.tamilmanam.in

*Original Research Paper – Peer reviewed*

# பல்லுயிர் பாதுகாப்பு நோக்கில் தொல்காப்பிய ஐந்திணைக் கோட்பாடுகள் – ஓர் சூழலியல் ஆய்வு

## Biodiversity Conservation in the Tolkāppiyam's Ainthinai Framework : An Ecological Study

**மா. ஜெனிபர் அமல்டா,**

*தமிழ்த்துறை, உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,*

*ஆர்வி. எஸ். தொழில்நுட்பக் கல்லூரி, சூலூர், கோயம்புத்தூர் – 641402*

**M. Jenifer Amalda*,**

*Assistant Professor in tamil, Department of tamil, Rvs Institute of Technology*
*Kumaran Kottam, Coimbatore – 641402.*
*Email: amaldatheresa@gmail.com, Tel: 6382170536*

**க. தமிழரசி,**

*உதவிப் பேராசிரியர்– தமிழ், தமிழ்த்துறை, ஆர்.வி.எஸ். தொழில்நுட்பக் கழகம்*
*குமரன் கோட்டம், கோயம்புத்தூர்– 641402*

**K. Tamilarasi,**

*Assistant Professor in Tamil, Department of Tamil, RVS Institute of Technology, Kumaran Kottam, Coimbatore – 641402,*
*Email: Mithuthamil2008@gmail.com .*

*Article history*
Received: 20-07-2026
Revised: 30-07-2026
Accepted: **10-08-2026**
Published on: 18-08-2026

*Corresponding Author Email:
*amaldatheresa@gmail.com*,
*Tel: 6382170536*

**Abstract:** Tolkāppiyam, the ancient grammatical text of Tamil, not only explains linguistic grammar but also records the geography, lifestyle, culture, and natural environment of the Tamil people. In particular, the Ainthinai (Five Landscapes) concept presented in the Porulatikaram is a significant framework that reveals the close relationship between the natural environment and human life. The five landscapes—Kurinji, Mullai, Marutham, Neithal, and Palai—are characterized by distinctive geographical features, climatic conditions, plants, animals, birds, water resources, occupations, and ways of life. This study examines the Ainthinai concept in Tolkāppiyam from the perspective of modern ecology and biodiversity conservation. By analysing the natural elements and biological diversity associated with each landscape, the study highlights the ecological knowledge and nature-oriented thinking of the ancient Tamils. It demonstrates that the Ainthinai classification reflects an integrated understanding of the interrelationship between humans, nature, and biodiversity, offering valuable insights for contemporary environmental conservation and sustainable living.

**Keywords:** *Biodiversity, Tolkāppiyam, Ainthinai, Ecology, Kurinji, Mullai, Marutham, Neithal, Palai, Nature.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/)

**DOI: https://doi.org/10.63300/tm12032026.40**

**முன்னுரை:**

உயிரினங்களின் தோற்றம், வளர்ச்சி, வாழிடம், உணவுச் சங்கிலி ஆகிய அனைத்தும் இயற்கைச் சூழலோடு நெருங்கிய தொடர்புடையவை. மனிதன் இயற்கையின் ஓர் அங்கமாக வாழ்ந்த தொன்மையான காலத்திலிருந்தே நிலம், நீர், தாவரங்கள், விலங்குகள் ஆகியவற்றின் பரஸ்பரத் தொடர்பு அவனது வாழ்வியலைத் தீர்மானித்துள்ளது. இத்தகைய இயற்கை சார்ந்த வாழ்வியல் சிந்தனைகள் தமிழரின் தொன்மையான இலக்கியங்களிலும் இலக்கணங்களிலும் பரவலாகப் பதிவாகியுள்ளன. குறிப்பாக, தமிழின் தொன்மையான இலக்கண நூலான தொல்காப்பியம், மொழியியல் கூறுகளைக் கடந்து, தமிழரின் நிலவியல்,வாழ்வியல் மற்றும் இயற்கைச் சிந்தனைகளை எடுத்துரைக்கும் முக்கியப் பண்பாட்டு ஆவணமாகத் திகழ்கிறது.

தொல்காப்பியம் பொருளதிகாரத்தில் அமைந்துள்ள ஐந்திணைக் கோட்பாடு, இயற்கைச் சூழலுக்கும் மனித வாழ்வியலுக்கும் இடையிலான உறவை அடிப்படையாகக் கொண்டதாக அமைகிறது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என வகைப்படுத்தப்படும் ஐந்து திணைகளும் வெவ்வேறான நில அமைப்பு, காலநிலை, தாவரங்கள்,விலங்குகள், நீர்வளம், தொழில் மற்றும் மக்களின் வாழ்வியல் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளன. எனவே, இத்திணை வகைப்பாடு வெறும் இலக்கியக் கோட்பாடாக மட்டுமல்லாமல், இயற்கை வளங்களையும் உயிரினங்களின் வாழிடங்களையும் அடிப்படையாகக் கொண்ட ஒரு தொன்மையான சூழலியல் சிந்தனை முறையாகவும் கருதத்தக்கது.

இன்றைய சூழலில் காடழிப்பு, நீர்நிலை அழிப்பு, வாழிடச் சிதைவு, வறட்சி, கடல் மாசுபாடு மற்றும் காலநிலை மாற்றம் போன்ற காரணிகளால் பல்லுயிர் வளம் பெருமளவில் பாதிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில், தொல்காப்பியத்தின் ஐந்திணைக் கோட்பாட்டைச் சூழலியல் நோக்கில் மறுவாசிப்பு செய்வது அவசியமாகிறது. ஒவ்வொரு திணைக்கும் உரிய இயற்கைக் கூறுகளையும் உயிரியல் கூறுகளையும் ஆராய்வதன் மூலம், பழந்தமிழர் இயற்கையை எவ்வாறு அவதானித்தனர் என்பதையும், மனித வாழ்வும் பிற உயிரினங்களின் வாழ்வும் இயற்கை வளங்களோடு எவ்வாறு இணைந்திருந்தன என்பதையும் அறிந்துகொள்ள முடிகிறது.

குறிஞ்சித் திணை மலை மற்றும் காடுகளின் பல்லுயிர் வளத்தையும், முல்லைத் திணை காடு மற்றும் மேய்ச்சல் நிலத்தின் உயிரியல் தொடர்பையும், மருதத் திணை ஆறு, குளம், வயல் போன்ற நீரியல் சூழலையும், நெய்தல் திணை கடல் மற்றும் கடற்கரைப் பல்லுயிரையும், பாலைத் திணை வறட்சி மற்றும் நீர்ப்பற்றாக்குறையால் ஏற்படும் சூழலியல் மாற்றத்தையும்

**DOI: https://doi.org/10.63300/tm12032026.40**

வெளிப்படுத்துகின்றன. இவ்வாறு ஒவ்வொரு திணையும் தனித்துவமான வாழிடத்தையும் அதனைச் சார்ந்த உயிரினங்களையும் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாய்வில், "பல்லுயிர் பாதுகாப்பு நோக்கில் தொல்காப்பியத்தின் ஐந்திணைக் கோட்பாடுகள் – ஓர் சூழலியல் ஆய்வு" என்னும் தலைப்பின் அடிப்படையில், ஐந்திணைகளில் இடம்பெறும் நிலம், நீர், தாவரங்கள், விலங்குகள் மற்றும் மனித வாழ்வியல் கூறுகள் ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன. தொல்காப்பிய நூற்பாக்களையும் அவற்றுடன் தொடர்புடைய சங்க இலக்கியச் சான்றுகளையும் அடிப்படையாகக் கொண்டு, தொன்மையான தமிழரின் இயற்கை உணர்வும் உயிரினப் பாதுகாப்பு சார்ந்த சிந்தனையும் பகுப்பாய்வு செய்யப்படுகிறது.

இதன் வழியாக, இயற்கையைப் பாதுகாப்பது என்பது தனிப்பட்ட ஓர் உயிரினத்தைப் பாதுகாப்பது மட்டுமன்று; அதன் வாழிடம், உணவு, நீர், தாவர வளம் மற்றும் அதனுடன் தொடர்புடைய பிற உயிரினங்களையும் பாதுகாப்பதாகும் என்ற சூழலியல் உண்மையைத் தொல்காப்பியத்தின் ஐந்திணைக் கோட்பாடு உணர்த்துகிறது என்பதை இவ்வாய்வு நிறுவ முயல்கிறது.

**ஆய்வுத் தலைப்பு:**

பல்லுயிர் பாதுகாப்பு நோக்கில் தொல்காப்பிய ஐந்திணைக் கோட்பாடுகள் – ஓர் சூழலியல் ஆய்வு— என்பது இவ்வாய்வின் தலைப்பாகும்.

**ஆய்வுச் சுருக்கம்:**

தமிழின் தொன்மையான இலக்கண நூலான தொல்காப்பியம், மொழியியல் இலக்கணத்தை மட்டும் எடுத்துரைக்காமல், தமிழர்களின் நிலவியல், வாழ்வியல், பண்பாடு மற்றும் இயற்கைச் சூழலையும் பதிவு செய்கிறது. குறிப்பாக பொருளதிகாரத்தில் இடம்பெறும் ஐந்திணைக் கோட்பாடு இயற்கைச் சூழலுக்கும் மனித வாழ்வியலுக்கும் இடையிலான நெருங்கிய தொடர்பை வெளிப்படுத்தும் சிறப்பான அமைப்பாகும். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்து நிலங்களாக வகைப்படுத்தப்பட்ட ஒவ்வொரு திணையும் தனித்துவமான நில அமைப்பு, காலநிலை, தாவரங்கள், விலங்குகள், பறவைகள், நீர்வளம், தொழில் மற்றும் மக்களின் வாழ்வியல் ஆகியவற்றை உள்ளடக்கியதாக அமைகிறது. இவ்வாய்வு தொல்காப்பியத்தின் ஐந்திணைக் கோட்பாபாட்டை நவீன சூழலியல் மற்றும் பல்லுயிர் பாதுகாப்பு நோக்கில் ஆராய்கிறது. ஒவ்வொரு திணையிலும் காணப்படும் இயற்கைக் கூறுகளையும், உயிரினப் பன்மையையும் ஆராய்வதன் மூலம், பழந்தமிழரின் இயற்கை சார்ந்த

**DOI: https://doi.org/10.63300/tm12032026.40**

சிந்தனையும் சூழலியல் அறிவும் வெளிப்படுகின்றன என்பதை இவ்வாய்வு எடுத்துக்காட்டுகிறது.

**திறவுச்சொற்கள்:**

பல்லுயிர், தொல்காப்பியம், ஐந்திணை, சூழலியல், குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, இயற்கை.

**கருதுகோள்:**

தொல்காப்பியத்தின் ஐந்திணைக் கோட்பாடு, ஒவ்வொரு நிலப்பரப்பிற்கும் உரிய தாவரங்கள், விலங்குகள், நீர்வளம் மற்றும் மனித வாழ்வியலை ஒருங்கிணைத்துக் காட்டுவதன் மூலம் பல்லுயிர் பாதுகாப்பையும் இயற்கைச் சமநிலையையும் வலியுறுத்துகிறது என்பதே இவ்வாய்வின் கருதுகோளாகும்.

**தொல்காப்பியமும் ஐந்திணைக் கோட்பாடும் :**

தமிழரின் தொன்மையான இயற்கை அறிவைப் புரிந்துகொள்ளத் தொல்காப்பியத்தின் ஐந்திணைக் கோட்பாடு முக்கியமான ஆதாரமாகும். தொல்காப்பியம் நிலத்தை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனப் பகுக்கிறது. ஒவ்வொரு நிலத்திற்கும் உரிய தெய்வம், உணவு, விலங்கு, மரம், பறவை, தொழில், நீர்நிலை போன்ற பல்வேறு கூறுகள் தொடர்புபடுத்தப்படுகின்றன. இதனை தொல்காப்பியர்,

**“மாயோன் மேய காடுறை உலகமும்**
**சேயோன் மேய மைவரை உலகமும்**
**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
**வருணன் மேய பெருமணல் உலகமும்...” (தொல். – அகத்-5)**

இந்நூற்பா நிலத்திற்கும் அதனுடன் தொடர்புடைய இயற்கைக் கூறுகளுக்கும் உள்ள உறவை வெளிப்படுத்துகிறது. நவீன சூழலியல் அறிவியலின் நேரடி முன்னோடியாக இதனைச் சொல்ல முடியாது. ஆனால் நிலம், உயிரினங்கள், மனித வாழ்வியல் ஆகியவற்றின் தொடர்பைப் பதிவு செய்யும் பண்பாட்டு சூழலியல் சிந்தனையாக இதனை அணுகலாம்.

**DOI: https://doi.org/10.63300/tm12032026.40**

**குறிஞ்சித் திணை – மலைச்சூழலும் பல்லுயிரும்**

குறிஞ்சித் திணை மலை மற்றும் மலை சார்ந்த பகுதிகளை அடிப்படையாகக் கொண்டது. மலைகள், அருவிகள், குகைகள், காடுகள், மலர்கள் மற்றும் வனவிலங்குகள் இந்நிலத்தின் இயற்கைக் கூறுகளாக அமைகின்றன. சங்க இலக்கியங்களில் யானை, புலி, மான், குரங்கு போன்ற பல்வேறு விலங்குகள் மலைச்சூழலோடு தொடர்புபடுத்தப்படுகின்றன. இப்பதிவுகள் மலைப்பகுதி பல்வேறு உயிரினங்களின் வாழிடமாக இருந்ததை உணர்த்துகின்றன.

**“கல்லெனக் கடலெனக் கானம் முழங்க,**

**அருவி ஆர்ப்ப…” (மலை- அடி.1-)**

என்னும் வரிகள் மலைக்காடுகளின் இயற்கை வளம், அருவி, நீர்வளம், உயிர்ச்சூழல் ஆகியவற்றின் செழிப்பை அழகாக எடுத்துக்காட்டுகின்றன.இப்பகுதி மலைப்பகுதியின் இயற்கைச் சூழலையும், அருவியின் ஓசையையும் உணர்த்துகிறது. மலை, காடு, நீர்வளம் ஆகியவை ஒன்றோடொன்று தொடர்புடைய இயற்கை அமைப்பாக விளங்குவதை மலைபடுகடாம் வெளிப்படுத்துகிறது.

**முல்லைத் திணை :**

சங்க இலக்கியத்தில் முல்லை நிலம் காடு, மேய்ச்சல் நிலம், கால்நடை வளர்ப்பு ஆகியவற்றுடன் தொடர்புபடுத்தப்படுகிறது. குறிப்பாக நற்றிணை மற்றும் ஐங்குறுநூறு பாடல்களில் ஆயர் வாழ்க்கை, மாடுகள், காடு, பசுமையான நிலம், ஆகியவை இடம்பெறுகின்றன.

**“மாயோன் மேய காடுறை உலகமும்”**

**— தொல்இ பொருள.;; அகம் 5**

இந்நூற்பா முல்லைத் திணையின் இயற்கைச் சூழலைக் காடு மற்றும் மேய்ச்சல் சார்ந்த உலகம் என அடையாளப்படுத்துகிறது. “மாயோன் மேய காடுறை உலகம்” என்ற தொடர், முல்லை நிலம் காடு சார்ந்த பகுதியாகவும், அங்கு கால்நடை மேய்த்தல் முக்கிய வாழ்வியல் நடவடிக்கையாகவும் இருந்ததை உணர்த்துகிறது. பல்லுயிர் பாதுகாப்பு நோக்கில், காடு, புல்வெளி, கால்நடைகள் மற்றும் காட்டு உயிரினங்கள் ஒன்றோடொன்று தொடர்புடைய சூழலியல் அமைப்பாக முல்லைத் திணை சித்தரிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

**மருதத் திணை :**

மருதத் திணை ஆறு, வயல், குளம், பொய்கை போன்ற நீர்வளங்களை மையமாகக் கொண்ட வளமான நிலப்பரப்பைக் குறிக்கிறது. இந்நிலத்தில் வேளாண்மை முக்கியத் தொழிலாக விளங்கியது. வயல் சார்ந்த நீர்நிலைகள் மனிதர்களின் வாழ்வாதாரத்திற்கு மட்டுமன்றி, மீன்கள், நீர்ப்பறவைகள், எருமைகள் போன்ற பல்வேறு உயிரினங்களின் வாழிடமாகவும் அமைந்திருந்தன. இதனால் மருத நிலம் மனிதன் மற்றும் பிற உயிரினங்கள் ஒன்றையொன்று சார்ந்து வாழ்ந்த பல்லுயிர்ச் சூழலியல் அமைப்பாக விளங்கியதைச் சங்க இலக்கியங்கள் உணர்த்துகின்றன.

இதற்குச் சான்றாக புறநானூறு பாடல் ஒன்று,

**“தண்டுறை ஊரன் கேண்மை**

**வழிவழிச் சிறத்தல் ஓம்புமின்”**

**— புறநானூறு ( 18)**

எனக் குறிப்பிடுகிறது. எனவே, நீர்நிலைகளைப் பாதுகாப்பது என்பது மனித வாழ்வை மட்டுமல்லாமல், அவற்றைச் சார்ந்து வாழும் பல்லுயிர்களையும் பாதுகாப்பதாகும். என்ற சூழலியல் கருத்தை மருதத் திணையின் வழியாகப் பெற முடிகிறது.

**நெய்தல் திணை:**

நெய்தல் திணை கடலும் கடற்கரையும் சார்ந்த நிலப்பரப்பைக் குறிக்கிறது. இந்நிலத்தின் இயற்கைச் சூழலில் கடல், மணற்கரை, புன்னை மரம், மீன்கள், கடற்பறவைகள் போன்ற பல்வேறு உயிரியல் கூறுகள் இடம்பெறுகின்றன. கடலைச் சார்ந்து வாழ்ந்த பரதவர்கள் மீன்பிடித்தல், கடல் சார்ந்த தொழில்கள் ஆகியவற்றை மேற்கொண்டனர். இதனால் நெய்தல் நிலம், மனித வாழ்வுக்கும் கடல் வாழ் உயிரினங்களுக்கும் இடையிலான நெருங்கிய தொடர்பை வெளிப்படுத்தும் முக்கியமான சூழலியல் நிலமாக விளங்குகிறது.

இதற்குச் சான்றாக அகநானூறு பாடலில்,

**“கானல் மாலைக் கழிப்பூக் கூம்ப**

**நீர்திகழ் கழனி நெய்தல் நீங்க...”**

(சிலப்-**70–71)**

இவ்வாறாக, சுட்டப்படுகிறது. நெய்தல் நிலத்தின் இயற்கை அமைப்பும் அந்நில மக்களின் வாழ்வியலும் ஒன்றோடொன்று தொடர்புடையதாகச் சங்க இலக்கியம் பதிவு செய்கிறது. இதனை நவீன சூழலியல் நோக்கில் பார்க்கும்போது, கடல் மற்றும் கடற்கரைச் சூழலைப் பாதுகாப்பது கடல்வாழ் பல்லுயிரையும் மனித வாழ்வாதாரத்தையும் பாதுகாப்பதாகும் என்ற கருத்தை முன்வைக்க முடிகிறது.

**பாலைத் திணை:**

சங்க இலக்கியத்தில் பாலைத் திணை என்பது இயற்கையாகத் தனித்த நிலப்பரப்பைக் குறிப்பதாக அல்லாமல், குறிஞ்சி மற்றும் முல்லை நிலங்கள் தம் இயல்பான தன்மையை இழந்து வறட்சியுற்ற நிலையில் பெறும் நிலத்தன்மையாகக் கருதப்படுகிறது. பாலை நிலத்தின் இயற்கைச் சூழலில் கடுமையான வெப்பம், நீர்ப்பற்றாக்குறை, வறண்ட நிலப்பரப்பு, தாவர வளத்தின் குறைவு போன்ற கூறுகள் இடம்பெறுகின்றன. இத்தகைய சூழல் மாற்றங்கள் மனிதர்களின் வாழ்வையும் பிற உயிரினங்களின் வாழ்வையும் பாதிக்கக்கூடியதாக அமைகின்றன. குறிப்பாக நீர்வளம் குறைவதால் தாவரங்களின் வளர்ச்சி பாதிக்கப்படுவதுடன், அவற்றை உணவாகவும் வாழிடமாகவும் சார்ந்திருக்கும் விலங்குகளும் பாதிப்புக்குள்ளாகின்றன. எனவே, பாலைத் திணை என்பது வறட்சியின் இயற்கை விளைவுகளை மட்டுமன்றி நிலம் – நீர் – தாவரம் – விலங்கு – மனிதன் ஆகியவற்றுக்கிடையிலான தொடர்பையும் வெளிப்படுத்துகிறது.

பாலை நிலத்தின் வழியாகச் செல்லும் மனிதர்களுக்கு நீர்நிலைகளின் அருமையும், மரங்களின் நிழலின் தேவையும், இயற்கை வளங்களின் பற்றாக்குறையும் உணர்த்தப்படுகின்றன. இதனால் நீரையும் நிலத்தையும் பாதுகாப்பதன் அவசியத்தை மறைமுகமாக உணர்த்தும் சூழலியல் சிந்தனை இத்திணையில் காணப்படுகிறது. குறிப்பாக இயற்கை வளங்களின் குறைவு உயிரினங்களின் வாழ்வியலை எவ்வாறு மாற்றுகிறது என்பதைப் புரிந்துகொள்வதற்கு பாலைத் திணை முக்கியமான சான்றாக அமைகிறது.

நவீன சூழலியல் நோக்கில் பாலைத் திணையை அணுகும்போது, மழைப்பொழிவு குறைதல், நீர்வளப் பற்றாக்குறை, அதிகரிக்கும் வெப்பநிலை, நிலத்தின் வறட்சி போன்ற காரணிகளால் உயிரினங்களின் இயற்கையான வாழிடங்கள் பாதிக்கப்படுவது நினைவிற்கு வருகிறது. இவ்வகையில், சங்கத் தமிழரின் நிலவியல் சிந்தனையில் காணப்படும் பாலைத் திணை, சூழல் மாற்றம் உயிரினங்களின் வாழ்விடத்தையும் மனித வாழ்வியலையும் பாதிக்கிறது என்ற நவீன சூழலியல் உண்மையோடு தொடர்புபடுத்திப் பார்க்கத்தக்கதாகும்.

**DOI: https://doi.org/10.63300/tm12032026.40**

இதனைத் தொல்காப்பியர்,

**"முல்லையும் குறிஞ்சியும் முறைமையின் திரிந்து**

**நல்லியல்பு இழந்து நடுங்குதுயர் உறுத்துப்**

**பாலை என்பதோர் படிவம் கொள்ளும்."**

**(**சிலப், அடிகள் 64–66)

பாலை என்பது தனித்த இயற்கை நிலம் என்பதைவிட, சூழலியல் மாற்றத்தால் உருவாகும் நிலத்தன்மை என்பதை விளக்குகிறது. இதன் அடிப்படையில் பாலைத் திணையைப் பல்லுயிர் பாதுகாப்பு நோக்கில் அணுகும்போது, வறட்சி மற்றும் நீர்வள மாற்றங்களைக் கட்டுப்படுத்துவதன் அவசியத்தையும் இயற்கை வாழிடங்களைப் பாதுகாப்பதன் தேவையையும் உணர முடிகிறது.

சங்க இலக்கியங்கள் தமிழர்களின் இயற்கை சார்ந்த வாழ்வியலைப் பதிவு செய்யும் முக்கியமான இலக்கியச் சான்றுகளாக விளங்குகின்றன. அவற்றில் மலை, காடு, வயல், கடல் போன்ற நிலப்பரப்புகளுடன் தொடர்புடைய பல்வேறு விலங்குகள் இடம்பெறுகின்றன. யானை, புலி, மான், குரங்கு, காட்டுப்பன்றி, எருமை, குதிரை போன்ற விலங்குகள் சங்கப் பாடல்களில் இயற்கைச் சூழலின் அங்கங்களாகச் சித்திரிக்கப்படுகின்றன. இவ்விலங்குகள் மனிதர்களின் வாழ்வியலோடும், குறிப்பிட்ட நிலப்பரப்புகளோடும் தொடர்புபடுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக யானை சங்க இலக்கியங்களில் அதிகமாகப் பதிவுசெய்யப்பட்ட விலங்காகும். மலை மற்றும் காடு சார்ந்த நிலப்பரப்பில் யானைகளின் நடமாட்டம் கூட்டத்திலிருந்து பிரிதல் , கன்றுகளுடன் வாழ்தல், உணவு தேடுதல் போன்ற இயல்புகள் பாடல்களில் இடம்பெறுகின்றன. இதற்குச் சிறந்த சான்றாக மலைபடுகடாம் அமைந்துள்ளது.

மலைபடுகடாமில் கானவர் வாழும் மலைப்பகுதியில் தன் இனத்திலிருந்து பிரிந்த யானை கானவர்களின் விளைநிலத்திற்குள் புகுந்து உண்பதாகக் கூறப்படுகிறது. இதனை,

**"இலங்கேந்து மருப்பின் இனம்பிரி ஒருத்தல்**

**விலங்கல் மீமிசைப் பணவைக் கானவர்**

**புலம்புக் குண்ணும் புரிவளைப் பூசல்..."**

**(**மலை. 297–304)

என்ற அடிகள் எடுத்துரைக்கின்றன. மனிதனுக்கும் விலங்குகளுக்கும் இடையிலான வாழ்விடத் தொடர்பை வெளிப்படுத்துகிறது. மலைக்காடு யானையின் இயற்கையான வாழிடமாக இருந்தபோதிலும் அதன் உணவு தேடும் நடவடிக்கை மனிதர்களின் விளைநிலத்தோடு தொடர்பு பெறுகிறது. இதன் மூலம் அக்காலச் சமூகத்தில் மனித வாழ்விடம் மற்றும் விலங்குகளின் இயற்கை வாழிடம் ஆகிய இரண்டிற்கும் இடையே காணப்பட்ட தொடர்பை அறிய முடிகிறது.

மலைபடுகடாம் மலைப்பகுதியில் யானை, புலி, மான், குரங்கு, பன்றி போன்ற பல்வேறு விலங்குகள் வாழ்ந்த இயற்கைச் சூழலைப் பதிவு செய்கிறது. உதாரணமாக,

**“கன்றரைப் பட்ட கயந்தலை மடப்பிடி**
**வலிக்குவரம் பாகிய கணவன் ஓம்பலின்**
**ஒண்கேழ் வயப்புலி பாய்ந்தெனக் கிளையொடு**
**நெடுவரை இயம்பும்…”**
**மலைபடுகடாம், அடி, 306–309.**

இப்பகுதியில் யானைக் குடும்பம் மற்றும் புலி ஆகிய இரு முக்கிய விலங்குகளின் இயற்கை வாழ்வியல் சித்திரிக்கப்படுகிறது. “கன்றரைப் பட்ட கயந்தலை மடப்பிடி” என்ற தொடர் கன்றுடன் கூடிய பெண் யானையின் இயற்கையான குடும்ப வாழ்வை வெளிப்படுத்துகிறது. அதனைத் தொடர்ந்து புலியின் பாய்ச்சல் குறிப்பிடப்படுவதன் மூலம் மலைப்பகுதியில் பல்வேறு விலங்குகள் ஒன்றோடொன்று தொடர்புடைய உணவுச் சங்கிலியில் வாழ்ந்த சூழலை உணர முடிகிறது.

**தொல்காப்பியத்தின் ஐந்திணைக் கோட்பாடு – சூழலியல் பார்வை:**

தொல்காப்பியத்தின் ஐந்திணைக் கோட்பாட்டில் ஒவ்வொரு நிலமும் தனித்துவமான உயிரியல் அமைப்பைக் கொண்டதாகக் காணப்படுகிறது.

| திணை | இயற்கைச் சூழல் | முக்கிய உயிரியல் கூறுகள் | சூழலியல் நோக்கு |
|---|---|---|---|
| குறிஞ்சி | மலை, காடு | யானை, புலி, மான்,குரங்கு,மரங்கள் | மலைக்காடு மற்றும் வனவிலங்கு பாதுகாப்பு |

| | | | |
|---|---|---|---|
| முல்லை | காடு, மேய்ச்சல் , நிலம் | கால்நடைகள், காட்டு உயிரினங்கள், மரங்கள், கொடிகள் | காடு மற்றும் மேய்ச்சல் நிலப் பாதுகாப்பு |
| மருதம் | வயல்,ஆறு, குளம்,பொய்கை | மீன், நீர்ப்பறவை, எருமை, வயல்வாழ் உயிரினங்கள் | நீர்நிலை மற்றும் வேளாண் சூழல் பாதுகாப்பு |
| நெய்தல் | கடல்,கடற்கரை | மீன்கள், கடல்வாழ் உயிரினங்கள், கடற்பறவைகள், புன்னை | கடல் மற்றும் கடற்கரைப் பல்லுயிர் பாதுகாப்பு |
| பாலை | வறண்ட நிலம், வெப்பம்,நீர்ப்பற்றாக்குறை | வறட்சியைத் தாங்கும் தாவரங்கள், விலங்குகள் | நீர்வளப் பாதுகாப்பு மற்றும் வறட்சி மேலாண்மை |

**முடிவுரை :**

இவ்வாய்வின் அடிப்படையில், தொல்காப்பியத்தில் இடம்பெறும் ஐந்திணைக் கோட்பாடு வெறும் இலக்கிய வகைப்பாடாக அமையாமல், நிலம், நீர், தாவரம், விலங்கு, மனிதன் ஆகியவற்றின் பரஸ்பரத் தொடர்பை விளக்கும் தொன்மையான சூழலியல் சிந்தனையாக விளங்குகிறது என்பதை அறிய முடிகிறது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய திணைகளின் வழியாக, ஒவ்வொரு நிலத்திற்கும் உரிய இயற்கை வளங்களும் உயிரினங்களும் அவற்றைச் சார்ந்த மனித வாழ்வியலும் தொல்காப்பியரால் ஒருங்கிணைத்துக் காட்டப்பட்டுள்ளன. குறிப்பாக, நிலத்திற்கேற்ப உயிரினங்களின் வாழிடம், நீர்வளத்தின் முக்கியத்துவம், தாவரங்களின் பங்கு மற்றும் மனிதனின் இயற்கை சார்ந்த வாழ்வியல் ஆகியவை ஐந்திணைக் கோட்பாட்டில் வெளிப்படுகின்றன. பாலைத் திணையின் வழியாகச் சூழல் மாற்றத்தால் நிலத்தின் இயல்பும் உயிரினங்களின் வாழ்வியலும் மாறக்கூடும் என்ற கருத்தும் புலப்படுகிறது.

எனவே, தொல்காப்பியரின் ஐந்திணைக் கோட்பாடு பல்லுயிர் பாதுகாப்பு, வாழிடப் பாதுகாப்பு, இயற்கை வளப் பாதுகாப்பு மற்றும் மனித–இயற்கை இணைவாழ்வு ஆகியவற்றிற்கு அடிப்படையான சிந்தனைகளை வழங்குகிறது. தொன்மையான இச்சூழலியல்

அறிவை இன்றைய தலைமுறையினரிடம் கொண்டு செல்வது, இயற்கை வளங்களையும் பல்லுயிர்களையும் பாதுகாத்து நிலையான வாழ்வியலை உருவாக்குவதற்கு வழிகாட்டியாக அமையும்.

**துணைநூல் பட்டியல்:**

[1]. ஐங்குறுநூறு. *எட்டுத்தொகை*, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

[2]. கபிலர், மற்றும் பிற சங்கப் புலவர்கள். *அகநானூறு*. *எட்டுத்தொகை*, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

[3]. சாமிநாதையர், உ. வே. *சங்க இலக்கியப் பதிப்புகள்*. உ.வே.சா. நூல் நிலையம்.

[4]. சிவத்தம்பி, க. *தமிழின் கவிதையியல்*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.

[5]. தொல்காப்பியர். *தொல்காப்பியம் – பொருளதிகாரம்*. உரையாசிரியர் பதிப்பு, உமா பதிப்பகம்.

[6]. நச்சினார்க்கினியர். *தொல்காப்பியம் – பொருளதிகாரம் உரை*. தமிழ்மண் பதிப்பகம்.

[7]. நற்றிணை. *எட்டுத்தொகை*, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

[8]. பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார். *மலைபடுகடாம்*. *பத்துப்பாட்டு*, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

[9]. புறநானூறு. *எட்டுத்தொகை*, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

[10]. வரதராசனார், மு. *தமிழ் இலக்கிய வரலாறு*. சாகித்திய அகாதெமி.

**References :**

1. *Tolkappiyar. Tolkappiyam – Porulathikaram. Annotated Edition. Chennai: Uma Publications.*
2. *Naccinarkkiniyar. Tolkappiyam – Porulathikaram: Commentary. Chennai: Tamilmann Publications.*
3. *Perungkundrur Perungkousikanar. Malaipadukadam. Pattuppattu. Chennai: Saiva Siddhanta Works Publishing Society.*
4. *Kapilar and Other Sangam Poets. Akananuru. Ettuthokai. Chennai: Saiva Siddhanta Works Publishing Society.*
5. *Purananuru. Ettuthokai. Chennai: Saiva Siddhanta Works Publishing Society.*
6. *Natrinai. Ettuthokai. Chennai: Saiva Siddhanta Works Publishing Society.*
7. *Ainkurunuru. Ettuthokai. Chennai: Saiva Siddhanta Works Publishing Society.*
8. *U. V. Swaminatha Iyer. Editions of Sangam Literature. Chennai: U. V. Sa. Library.*
9. *Mu. Varadarajanar. History of Tamil Literature. Chennai: Sahitya Akademi.*
10. *K. Sivathamby. Tamil Poetics. Chennai: New Century Book House.*